**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்</u>**

O.S.No.04/2025

பி.வா.சா.2– பாண்டியன் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 19.06.2026ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>பி.வா.சா.2– பாண்டியன் த/பெ கந்தசாமி</u>**

**<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. நான் இரும்பூதிபட்டியில் குடியிருந்து வருகிறேன். என்ன படித்துள்ளேன் என்றால் SSLC படித்துள்ளேன். முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விவரம் எனக்கு தெரியும். 1ம் பிரதிவாதி மணிகண்டன் எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது பெரியப்பாவின் மகளின் மகன். இந்த வழக்கு வாதி தர்மலிங்கம் எதற்காக போட்டுள்ளார் என்றால் இடம் அவரது அப்பா பெயர் இருப்பதாக விடமுடியாது என்று கூறி வழக்கு போட்டுள்ளார். தாவா சொத்துக்கான நான்கெல்லை விவரம் தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்தின் சர்வே எண். 145 ஆகும். 1ம் பிரதிவாதி மணிகண்டனுக்கு இந்த இடம் எப்படி கிடைத்தது என்று தெரியுமா என்றால் தெரியும்.

2. 5, 6 பிரதிவாதிகளுடன் வாதி கூட்டு வைத்து கிராமபுற பட்டாவில் புலவரைபடத்தை மாற்றியமைக்க முயன்றார் என்று அரசு அலுவர்களுக்கு புகார் கொடுத்துள்ளேனா என்றால் மணிகண்டன் கொடுத்துள்ளார். வாக்குமூலத்தில் சொல்லியுள்ள அனைத்தும் பொய்யானது என்றால் சரியல்ல. மணிகண்டன் உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.22 10:53:24 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**கிருஷ்ணராயபுரம்.**